இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

பந்தி மேற்பார்வையாளர் திராட்சை இரசமாய் மாறியிருந்த தண்ணீரைச் சுவைத்தார். அந்த இரசம் எங்கிருந்து வந்தது என்று அவருக்குத் தெரியவில்லை; தண்ணீர் மொண்டு வந்த பணியாளருக்கே தெரிந்திருந்தது. ஆகையால் பந்தி மேற்பார்வையாளர் மணமகனைக் கூப்பிட்டு, “எல்லாரும் நல்ல திராட்சை இரசத்தை முதலில் பரிமாறுவர்; யாவரும் விருப்பம்போலக் குடித்தபின்தான் தரம் குறைந்த இரசத்தைப் பரிமாறுவர். நீர் நல்ல இரசத்தை இதுவரை பரிமாறாமல் ஏன் வைத்திருந்தீர்?” என்று கேட்டார்.

(யோவான் 2:9-10)

# குழந்தை சுரண்டலைத் தடுக்கும், கண்டிக்கும் கடமை கிறிஸ்தவர்களுக்கு உண்டு-திருத்தந்தை அறிவுறுத்து

வத்திக்கான்: உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவர்கள் தங்கள் வலி மற்றும் துன்பங்களைப் பற்றி அலட்சியமாக இருக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ், குழந்தைகளுக்கு எதிரான சுரண்டல் மற்றும் வன்முறையின் கொடுமையை நிவர்த்தி செய்ய இந்த ஆண்டின் முதல் பொது மக்கள் சந்திப்பின் பொது அழைப்புவிடுத்தார்.

"குழந்தைத் தொழிலாளர் கொடுமை" மீதான பிரச்சனையில் கவனத்தை ஈர்த்து, "பல குழந்தைகள் வேலை செய்யத் தள்ளப்படுகிறார்கள்" என்று புலம்பினார். அவர்கள் புன்னகைக்கவோ, கனவு காணவோ அல்லது தங்கள் திறமைகளை வளர்க்கவோ முடியாத நிலையில் ஆயிரக் கணக்கான சிறார்கள் துன்புறுகிறார்கள் என்று மேலும் கூறினார் திருத்தந்தை.

"உலகில் உள்ள ஒவ்வொரு பகுதியிலும், வாழ்க்கை மதிப்பீடுகளை மதிக்காத பொருளாதாரத்தால் சுரண்டப்படும் குழந்தைகள் அவதியுறுகின்றனர். ஒரு பொருளாதாரம், அவ்வாறு செய்யும்போது, நம்முடைய மிகப்பெரிய நம்பிக்கை மற்றும் அன்பின் களஞ்சியம் பாதிப்படைகிறது" என்று அவர் கடந்த புதன்கிழமை கூறினார்.

விளிம்பில் விடப்பட்ட மற்றும் சுரண்டப் பட்டு முறைகேடுகள் செய்யப்பட்ட குழந்தையின் கண்களைப் பார்ப்பது நமக்குக் கடினமாக உள்ளது. செயற்கை நுண்ணறிவை உருவாக்கி, பல கிரக இருப்பை வடிவமைக்கும் இக்காலமானது, அவமானப்படுத்தப்பட்டு, சுரண்டப்பட்டு, காயமுற்று இறந்த



குழந்தைப் பருவத்தின் துன்பத்தினைக் கண்டுகொள்ளவில்லை என்றார்.

இயேசு தன்னுடைய பொதுவாழ்க்கையில் தனது சீடர்களுடன் இணைந்து கிராமங்களில் இறையரசுப் பற்றியக் கருத்துக்களை எடுத்துரைத்து வந்தார். அப்போது ஒருநாள் ஒரு சில தாய்மார்கள் தங்களதுக் குழந்தைகளை அவரிடம் கொண்டுவந்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். சீடர்களோ அவர் களை அதட்டினர். இயேசுவோ செயலற்ற பொருளாகக் குழந்தைகளை நினைக்கும் பண்டைய மரபை உடைக்க நினைத்தார் இயேசு. அவர்களைத் தம்மிடம் வரழைத்து, “சிறுபிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள்; அவர்களைத் தடுக்காதீர்கள்; ஏனெனில், இறையாட்சி இத்தகையோருக்கே உரியது என்று சீடர்களிடம் கூறினார்.

மேலும், “என்மீது நம்பிக்கை கொண்டுள்ள இச்சிறியோருள் எவரையாவது பாவத்தில் விழச்செய்வோருடைய கழுத்தில் எந்திரக் கல்லைக் கட்டித் தொங்கவிட்டு ஆழ்கடலில் அமிழ்த்துவது அவர்களுக்கு நல்லது என்று எச்சரிக்கின்றார்.

நிறைவாக, குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள் அல்லது முறைகேடுகள் செய்யப்படுவதைத் தடுக்கவும் கடுமையாக கண்டிக்கவும் கிறிஸ்தவர்கள் கடமைப் பட்டுள்ளனர் என்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.

சகோதர சகோதரிகளே, இயேசு கிறிஸ் துவின் சீடர்களாக இருப்பவர்கள், குழந் தைகள் புறக்கணிக்கப்படுவதையோ, முறை கேடுகள் செய்யப்படுவதையோ, உரிமை கள் பறிக்கப்படுவதையோ, அன்பற்ற வர்களாகவும் பாதுகாப்பற்ற வர்களாகவும் அவர்கள் இருப்பதையோ ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது

பல சிறார்கள் வேலை செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். ஆனால் சிரிக்காத, கனவு காணாத குழந்தையால் தனது திறமைகளை அறிந்து கொள்ளவோ, அல்லது வளர்ந்து துளிர்விடவோ முடியாது என்கிறார் திருத்தந்தை.

# புனித பாத்திமா அன்னை பங்கில் ஆண்டவரின் திருக்காட்சி பொங்கல் கொண்டாட்டம் 2025

கோலாலம்பூர்: கடந்த 5 சனவரி 2025, ஞாயிறன்று, பிரிக்பீஃஃல்ஸ் பகுதியில் அமைந்தள்ள புனித பாத்திமா அன்னை ஆலயத்தில் மாலை 4 மணிக்குத் திருப்பலியுடன் பொங்கல் விழாக் கொண்டாட்டம் சிறப்பிக்கப்பட்டது. புனித பாத்திமா அன்னை பங்கின் திருத்தூது பணிக் குழுவின் ஏற்பாட்டில் தமிழ் பேசும் மக்கள், பங்கின் இதர பணிக்குழுக்களுடன் இணைந்து 2025 பொங்கல் விழா கொண்டாட்டத்திற்கு ஏற்படு செய்தனர்.

பொங்கல் விழா இறைவனுக்கும், இயற்கைக்கும், உழவர்களுக்கும் நன்றி கூறும் விழா மட்டுமல்ல, மனுக்குலத்தின் ஒற்றுமையின் விழா என்று கூறுவது சிறப்பாகும். அன்று, பிற்பகல் 3 மணி அளவில் ஆலய வாயிலில் பொங்கல் சமைக்கப்பட்டது. தமிழிசை முழங்க, பங்கு அலுவலகம் முன்னிருந்து ஞாயிறு மறைக்கல்வி மாணவர்கள் விளக்கேந்தி, சிறார்களின் அணி சூழ, பவனியாக, ஆலயத்தின் முன் வாயிலை வந்தடைந்தனர்.

தொடர்ந்து, தமிழகத்தின் அருள்பணி செபஸ்தியன் அவர்களின் தலைமையில், பங்குத்தந்தை என்ரூ மாணிக்கம் இருவரும் பொன்னாடை மற்றும் சந்தன மாலை அணிவித்து, வருகைப் பாடல் முழங்க பொங்கல் திருப்பலி இனிதே தொடங்கியது. அருள்பணி செபஸ்டியன் மறையுரையில் ஞாயிறு வாசகங்களுக்கும், பணிவாழ்க் கைக்கும் உள்ள தொடர்பை தெளிவாக விளக்கியதுடன், ஆண்டவரின் திருக்காட்சிப் பொங்கல் வரலாற்றுப் பின்னணியை குறித்து விவரித்தார். இயேசுவுக்காக மட்டுமே பணி செய்கிறேன் என்பதை மனதில் கொண்டு இறைவனின் தாய் மரியாவைப் போல்



திருப்பலிக்குத் தயாராகும் அருள்பணியாளர்கள் செபஸ்தியன், என்ரூ மாணிக்கம்

‘இதோ உமது அடிமை’ என்று தாழ்ச்சி உள்ளம் கொண்டவர்களாய் பணி வாழ்வுக்கு நம்மை அர்ப்பணிப்போம் என்று அழைப்பு விடுத் தார்.

தொடர்ச்சி, அடுத்துப் பக்கம்

# கிளந்தான், கோத்தா பாருவில் கிறிஸ்மஸ் பெருவிழா கொண்டாட்டம்

கோத்தா பாரு: கர்தினால் செபஸ்தியன் அவர்கள் 2024 ஆம் ஆண்டின் இயேசு பிறப்பு பெருவிழா திருப்பலி கொண்டாட்டத்தை கிளந்தான், கோத்தா பாரு, செபமாலை அன்னை, பாத்திமா தேவாலயத்தில் கொண்டாடினார். அன்று, திருப்பலியோடு, திருமுழுக்கு, திருமணம் புரிந்தோரின் திருமணத்தை கத்தோலிக்க முறைப்படி உறுதிபடுத்துதல், உறுதிப்பூசுதல் ஆகிய அருட்சானதங்களை யும் நிறைவேற்றினார்.

அன்றைய கொண்டாட்டத்தின்போது, அவருடன் அருட்சகோதரி புளோரன்ஸ் நெமிசியஸ், மறைமாவட்ட மலாய் மொழி



திருத்தூதுப் பணிக்குழுவின் பிரான்சிஸ்கன் அருட்சகோதரிகள் (FSIC), ஷா ஆலம், மான்ட்ஃபோர்ட் பாய்ஸ் மையத்தைச் சேர்ந்த சகோதரர் பிரான்சிஸ் சேவியர் காஸ்பர் மற்றும் பினாங்கு மறைமாவட்டத்தைச் சேர்ந்த செரீனா ஜோனியஸ் (PDYN Network) ஆகியோர் உடனிருந்தனர்.



கோத்தா பாருவில் உள்ள FMM கான்வென்ட், 62 ஆண்டுகளாக மறைபரப்பு பணியில் ஈடுபட்டு வருகிறது என்பது குறிப்படத்தக்கது, இது உள்ளூர் கத்தோலிக்க சமூகத்தின் வழிபாட்டு மையமாகவும் திகழ்கிறது. இன்று, FMM சகோதரிகள் பாலர் பள்ளி, திருஅவை பணி, இல்லச் சந்திப்பு, பல்கலைக்கழக மாணவர்களை அணுகுதல், ஆலோசனை மற்றும் ஆன்மீக வழிகாட்டுதல், மற்றும் பல்வேறு இடங்களில் பஹாசா குழுவிற்கான மறைக்கல்வி போதித்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளனர். ஏறக்குறைய 400 இறைமக்கள் கிறிஸ்துமஸ் திருப்பலியில் கலந்துகொண்டனர் என தெரிவிக்கப்பட்டது.

முதல் பக்கத் தொடர்ச்சி.

திருப்பலியின் முடிவில் பொங்கல் ஏற்பாட்டு குழுத் தலைவி சகோதரி மெலிசா நன்றியுரை கூறினார். தொடர்ந்து, புனித பாத்திமா மண்டபத்தில் பொங்கல் பண்பாட்டுக் கலை நிகழ்வு நடத்தப்பட்டது. தமிழ் பண்பாட்டு போட்டிகள், மற்றும் நடனம் என்று இளைஞர் பணிக்குழுவின் படைப்புகள் அனைவரையும் கவர்ந்தது. இந்த பண்பாட்டு நிகழ்ச்சிகளுக்கிடையில் பொங்கலோடு சிற்றுண்டியும் வழங்கப்பட்டது.



பொங்கல் கொண்டாட்டம் சிறப்புற நடைபெற நல்லாதரவும் ஆலோசனையும் வழங்கிய பங்குத்தந்தைக்கும், அருள்பணி செபஸ்தியன் அவர்களுக்கும், நன்கொடைகள் வழங்கிய நல்லுள்ளங்களுக்கும் ஏற்பாட்டுக்குழுவினர் நன்றி மாலை சூட்டினர்.

-புனிதா இராயன்

# கிறிஸ்தவ ஒற்றுமை இறைவேண்டல் வாரம் 2025 (சனவரி 18-25)

ஒவ்வொரு ஆண்டும் சனவரி 18 முதல் 25 வரை கிறிஸ்தவ ஒற்றுமை இறைவேண்டல் வாரத்தை நாம் கடைப்பிடித்து வருகிறோம். மோதல்களாலும் பிரிவினைகளாலும் சிதறுண்டு, ஒற்றுமை சீர்குலைந்து கிடக்கும் இவ்வுலகிற்கு நற்செய்தியை எடுத்துரைக்க வேண்டிய திருஅவை, தெருவுக்கு ஒரு சபையாக பிளவுப்பட்டிருப்பது ஏற்க இயலாத ஒன்று. உலகிற்கு ஒளியாகவும் உப்பாகவும் திகழ வேண்டிய திருஅவை பிறரின் நகைப்புக்கு ஆளாகியுள்ளதை மறுப்பதற்கில்லை.

இயேசு அவரது மலைப்பொழிவின் ஒரு பகுதியாக, ‘வெளிவேடக்காரரே, முதலில் உங்கள் கண்ணிலிருந்து மரக்கட்டையை எடுத்தெறியுங்கள். அதன்பின் உங்கள் சகோதரர் அல்லது சகோதரியின் கண்ணிலிருந்து துரும்பை எடுக்க உங்களுக்குத் தெளிவாய்க் கண் தெரியும்’ (மத் 7:6) என்றார். கிறிஸ்தவர் உலகிற்கு இறையாட்சி குறித்து அறிவுறுத்தும் முன், அது தன்னில் உள்ள குறைபாடுகளைக் களைய வேண்டும். இதன்பொருட்டு, காலவோட்டத்தில் ஒரே திருஅவை உருவாகும் என்ற நோக்கத்தில் ஒவ்வொரு ஆண்டும் சனவரி 18 முதல் 25 வரை இந்த கிறிஸ்தவ ஒற்றுமை இறைவேண்டல் வாரத்தை நாம் கடைப்பிடித்து வருகிறோம்.

முதல் நூற்றாண்டில் இருந்த கிறிஸ்தவர்கள் தங்களில் வேற்றுமைகள் இன்றி சேர்ந்து பணி செய்தார்கள். அவர்களுக்கு வித்தியாசமான திறமைகள், நியமிப்புகள் இருந்தாலும் ஒற்றுமையாக இருந்தார்கள் என்று திருத்தூதர் பவுல் பதிவுச் செய்துள்ளார், சபையின் தலைவரான இயேசு கிறிஸ்துவை அவர்கள் பின்பற்றினார்கள். பவுல் அவர்களை உடலில் இருக்கும் உறுப்புகளுக்கு ஒப்பிட்டு பேசினார். அந்த உறுப்புகள் வித்தியாசமாக இருந்தாலும் அவை ஒன்று சேர்ந்து வேலை செய்வதுபோல் அவர்களும் சேர்ந்தே வேலை செய்கிறார்கள் என்று சொன்னார் (1 கொரி 12:4-6).

இயேசு ‘எங்கள் வானகத் தந்தாய்' என்றே நம்மை தந்தையை நோக்கி இறைவேண்டல் செய்ய அழைத்தார். அவர் மேலும், 'எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக' (யோவா.17:21) என்றே தம் தந்தையை நோக்கி மன்றாடினார். திருமுழுக்குப் பெற்ற அனைவரும் ஒரே குடும்பமாக மண்ணுலகிற்கு உப்பாகவும், ஒளியாகவும் வாழ வேண்டும் என்று



இன்றும் மன்றாடுகிறார். ஆனால், இன்றைய கிறிஸ்தவம் அவரை நோக்கி பல்வேறு காரியங்களுக்காக மன்றாடுகிறார்களேயொழிய அவரது மன்றாட்டை விருப்பத்தை நிறைவேற்றும் மக்களாக ஒளிரவில்லை.

ஆகவே, இவ்வாண்டும் இயேசுவின் விருப்பத்தை உலக கிறிஸ்தவர்களுக்கு நினைவூட்டும் நோக்கத்திலும், அனைவரும் இயேசுவின் திருப்பெயரில் ஒன்றிக்கும் அழைப்பைவிடுக்கும் வகையிலும் எட்டு நாள்கள் கொண்ட இந்த கிறிஸ்தவ ஒற்றுமை இறைவேண்டல் வாரம் கடைப்பிடிக்கப்படுகிறது.

இவ்வருடத்திற்கான கருப்பொருள் ‘இதை நீ நம்புகிறாயா?” (யோவான் 11:18) என்பதாகும். கிறிஸ்தவ ஒற்றுமைக்கு நம்மால் ஆன முயற்சிகளை மேற்கொள்வதை கடமையென கொள்வோம்.

-ஆர்.கே.

**விண்மீன் தனது ஒளியால் ஞானிகளை பெத்லகேமுக்கு அழைத்துச் சென்றதுபோல நாமும் நமது அன்பால், நாம் சந்திக்கும் மக்களுக்கு இயேசுவைக் கொண்டு வருபவர்களாக இருக்கவேண்டும்**

**-திருந்தந்தை-**

# அவர் சொல்வதையே செய்வோம்!

இன்று ஆண்டின் பொதுக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு. இன்று இயேசுவில் இறைவன் வெளிப்படுத்திய அவரது அன்பு, இதுவரை வெளியிடப்பட்ட எல்லா வெளிப்பாட்டிலும் மிகவும் மேலானது என்ற கருத்தோட்டத்தில் இன்றைய வாசகங்கள் தேர்வுச் செய்யப்பட்டுள்ளன. முதல் வாசகத்தில், கடவுளின் அளவில்லாத அன்பு நம்மை வழிநடத்தும், இறைவன் நம்மை முழுமையாக ஏற்று அன்பு செய்கிறார் என்ற நம்பிக்கையை எசாயா தருகிறார்.

யூதர்கள் பாபிலோனியர்களால் நாடுகடத்தப்பட்ட காலத்தில், அவர்கள் அன்னிய பாபிலோனில் அடிமைகளாய் வாழ்ந்தபோது இனி வாழ்வே இல்லை, எல்லாமே முடிந்துவிட்டது'' வாடி வதங்கிய வேளையில் கடவுள் இறைவாக்கினர் எசாயா வழியாக, “சீயோனின் வெற்றி வைகறை ஒளியென இருக்கும்” என்று திடப்படுத்துகிறார்.

அடுத்து வரும் இரண்டாம் வாசகத்தில், தந்தை, மகன், தூய ஆவியாரை நம்பும் கிறிஸ்தவ சமூகம், தூய ஆவியாரின் செயல்பாடுகள் மீது அதிக நம்பிக்கை அதே தூய ஆவியின் வல்லமையால் நல்ல, நேர்மையான கிறிஸ்து சாட்சிய வாழ்வுக்கு புனித சவுல் அழைக்கிறார்.

தொடர்ந்து, இயேசுவை கானாவில் ஒரு திருமண வீட்டில் சந்திக்கிறோம். யூதர்களில் வழக்கப்படி, திருமண விழாவில், “திராட்சை இரசம் இல்லையெனில், மகிழ்ச்சிக்கு வழியில்லை” என்பது அக்காலத்தில் நிலவிய ஒரு பழமொழி. ஒரு வாரம் நடைபெறும் யூதர்களின் திருமணக் கொண்டாட்டத்தில் திராட்சை இரசம் முக்கிய இடம் வகிக்கும். அது தீர்ந்துவிட்டால் மணமகன் வீட்டாருக்கு பெரிய அவமானமாகக் கருதப்படும். இயேசு தன் தாய் மற்றும் சீடர்களோடு சென்றிருந்த கானா திருமண விருந்தில் திராட்சை இரசம் தீர்ந்துபோக, இயேசுவின் தாய் அவரிடம் வந்து, “திராட்சை இரசம் தீர்ந்துவிட்டது” என்கிறார். இதற்கு இயேசு அளித்த பதில், “எனது நேரம் இன்னும் வரவில்லையே” என்கிறார்.

வெற்றி இல்லையேல் திராட்சை இரத்திற்கு பெருமை இல்லை. எனவேதான் “எனது நேரம் இன்னும் வரவில்லையே” என்று இயேசு சொன்னது, அவரது அவரது பாடுகளைக் குறிப்பதாகவும், அவர் தான் பாடுகள் பட்டு, இறந்து, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து, வரும்பொழுது திராட்சம் இரசம் கிடைக்கும் என்கிற பொருளில் இயேசு, “எனது நேரம் இன்னும் வரவில்லையே” என்றார் என்று பொருள் கொள்ளலாம். இதற்கு எசாயா கூறிய ‘மெசியாவின் வருகையின்போது திராட்சை இரசம் மிகுதியாகக் கிடைக்கும் (எரே 31:12 ) என்பது அடிப்படை காரணமாக உள்ளது.

இருந்தாலும், தாய் சொல்லைத் தட்ட மனமில்லாத இயேசு, தண்ணீரைத் திராட்சை இரசமாக்கி, மணமகன் வீட்டாரின் அவலத்தைப் போக்கி, அவர்களது துன்பத்தை இன்பமாக மாற்றுகின்றார்.

ஆம், அன்னை மரியாவின் பரிந்துரைக்கு இயேசு தலைவணங்கினார். நாம் ஏன் மரியாவை நோக்கி வேண்டவேண்டும் என்பதற்கு இந்த நிகழ்வு பெரும் ஆதாரமாக உள்ளது. எனவேதான் மரியா ““அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்” என்று நம்மையும் பணிக்கிறார். நமது அன்றாட வாழ்வில், துன்பங்களும் தோல்விகளும் இருந்தாலும், அவற்றையெல்லாம் நாம் ஆண்டவரிடம் கொண்டு சென்றால், ஆண்டவர் அவற்றை இன்பமாக மாற்றுவார் என்பதை அறிந்தவர்களாக சாட்சிய வாழ்வு வாழ்வோம்.

-சவரிநாதன், சுங்கை பட்டாணி

**பொதக்காலம் 2-ம் ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம்: | எசாயா 62: 1-5 |
| திரு.பாடல் | 95:1-3, 7-10 |
| 2-ம் வாசகம் | 1 கொரி 12: 4-11 |
| யோவான் | 2: 1-12 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 3(C)**

**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**

**திருப்புகழ் மாலை:வாரம் 2**